Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 329

சனிக்கிழமை 21 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 04 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



வடக்கு – கிழக்கில்

## ஹர்த்தாலால் நேற்று இயல்புநிலை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 21

ஹர்த்தால் காரணமாக தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் இயல்பு நடவடிக்கைகள் நேற்றையதினம் பெரியளவில் பாதிப்புற்றன. »11

ஹர்த்தாலுக்கு மத்தியில்

## பாடசாலைகளில் 98 வீதம் வரவு!

யாழ்ப்பாணம், ஒக். 21

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் 98 வீத வரவு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வட மாகாணக் கல்வித் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலைகளில் தற்போது தவணைப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. மாணவர் »11

## கச்சா எண்ணெய் நேற்றும் ஏற்றம்!

கொழும்பு, ஒக். 21

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலையில் நேற்றுச் சிறிது ஏற்றம் ஏற்பட்டுள்ளது. »11



கோப்புப் படம்

இந்திய இராணுவத்தின் வெறியாட்டம்

## யாழ். மருத்துவமனைப் படுகொலை: 36 ஆவது நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 21

அமைதிப்படை என்ற போர்வையில் தமிழர் தாயகத்துக்குள் நுழைந்த இந்திய இராணுவத்தினர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்து சரமாரியாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்களின் 36ஆவது அஞ்சலி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் »11

## வங்காள விரிகுடாவில் வலுவாகும் தாழமுக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 21

தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்தத் தாழமுக்கம் ஒன்று உருவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. »11

## டயானா மீது தாக்குதல்?

கொழும்பு, ஒக். 21

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேரா என்மீது தாக்குதல் நடத்தினார். இதற்கு எதிராக நான் வீதியில் இறங்கிப் போராடுவேன் என்று இராஜாங்க அமைச்சர் »11

## அரசியல் நோக்கமின்றி இலங்கைக்கு ஆதரவு!

சீன ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 21

நிலையான பொருளாதாரத்தைக் கட்டமைக்க எவ்வித அரசியல் நோக்கங்களும் இன்றி இலங்கைக்கு ஆதரவளிக்க சீனா தயாராகவிருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க »11



## டயானா கமகேவை நான் தாக்கவில்லை

சுஜித் பெரேரா விளக்கம்

கொழும்பு, ஒக். 21

டயானா கமகேவை நான் தாக்கவில்லை. அவர்தான் என்னைத் தாக்க முற்பட்டார். அதனையே நான் தடுத்து நிறுத்தினேன். இது தொடர்பில் விசாரணை நடத்துங்கள் - இவ்வாறு சபாபீடத்திடம் கோரிக்கை விடுத்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் »11

## கிளைமோர் குண்டுகள் சாவகச்சேரியில் மீட்பு!



யாழ்., ஒக். 21

தென்மராட்சி பிரதேசத்தில் இரண்டு கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று »11

## அரசமைப்புப் பேரவை என்பது ஐ.தே.க.வின் செயற்குழுவல்ல

கொழும்பு, ஒக். 21

யாருடைய தேவைக்காகவும் பொலிஸ்மா அதிபரை நியமிக்க அரசியலமைப்புப் பேரவை தயார் இல்லை. அத்துடன் ஜனாதிபதியிடமிருந்து வரும் அனைத்து விடயங்களுக்கும் ஆமாம் சாமி போட அரசியலமைப்புப் பேரவை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக் »11

## மின்கலம் வெடித்து நான்கு பேர் காயம்

முல்லைத்தீவு, ஒக். 21

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் பகுதியில் மின்கலம் ஒன்று வெடித்ததில் நான்கு பேர் காயமடைந்தனர். »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் நேற்றைய ஹர்த்தால் பதிவுகள்...!



வவுனியா



யாழ்ப்பாணம்



மன்னார்



கிளிநொச்சி



வல்வெட்டித்துறை



சாவகச்சேரி

# இலங்கைக்கு எப்போதும் சீனா தோள்கொடுக்கும்!

## அந்நாட்டு துணைப் பிரதமர் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 21**

**இறப்பர் - அரிசி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் மூலம் இலங்கை வழங்கிய ஆதரவை சீனா ஒருபோதும் மறந்துவிடாது. சீனா இலங்கைக்கு தனது ஆதரவை எவ்வேளையிலும் வழங்கும் என்று சீன துணைப் பிரதமர் டிங் ஷீசியான் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சீன துணைப் பிரதமருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பீஜிங் நகரில் இடம்பெற்ற, இருதரப்புப் பேச்சின்போதே சீன துணைப் பிரதமர் இதனைத் தெரிவித்தார். இதன்போது இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு சீனா வழங்கும் ஆதரவை நன்றிகூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரு நாடுகளினதும் பொதுவான கொள்கைகளுக்கு அமைவாக புதிய வர்த்தக உறவுகளை மேம்படுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

பட்டுப் பாதைத் திட்டத்தின் கீழ் கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக சீன துணைப் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார். அதேபோல், பிராந்திய பொருளாதார உறவுகளுக்கான அமைப்பில் அங்கத்துவம் பெறுவதற்கு இலங்கை முயற்சிக்கிறது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ச-இ)

## கூடைப்பந்தாட்டப் போட்டி யாழ். மாவட்டம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 21

அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணி சம்பியனைத் தனதாக்கியது.

இதனைப் பாராட்டும் நிகழ்வு யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் பங்கேற்பில் நடைபெற்ற நிகழ்வில், அகில இலங்கை ரீதியாக இடம்பெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய யாழ். மாவட்ட வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டனர். (ச-27)



## யாழ்ப்பாணத்துக்கு ஆதிவாசிகள் 'விசிட்'

வரலாற்றில் முதன்முறையாக மஹியங்கனையில் வசித்துவரும் ஆதிவாசிகள் யாழ்ப்பாணத்துக்கு இன்று சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னிலஅத்தோ தலைமையிலான 60 பேரைக் கொண்ட ஆதிவாசிகள் குழுவினரே இன்றும், நாளையும் யாழ்ப்பாணத்தில் சுற்றுப் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளனர். இதன்போது யாழில் பிரசித்தி பெற்ற இடங்களை அவர்கள் பார்வையிடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டில் 3 ஆவது முறையாக உயர்ந்தது மின்சாரக் கட்டணம்!

## அனுமதித்தது ஆணைக்குழு

**கொழும்பு, ஒக். 21**

**மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான செலவை ஈடு செய்யும்வகையில் மின்சாரக்கட்டணத்தை அதிகரிக்குமாறு இலங்கை மின்சாரசபை விடுத்த கோரிக்கையை அனுமதித்துள்ளது பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு.**

அதன்படி நேற்று வெள்ளிக்கிழமை முதல் மின்சாரக் கட்டணத்தை 18 வீதமாக உயர்த்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுதெரிவித்துள்ளது.

இதற்கமைய 0 முதல் 30 வரையான அலகுகளுக்கான கட்டணம் 10 ரூபாவிலிருந்து 12 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் நிலையான கட்டணம் 150 ரூபாவிலிருந்து 180 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

31 முதல் 60 வரையான அலகுகளுக்கான கட்டணம் 25 ரூபாவிலிருந்து 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ள அதேநேரம் குறித்த அலகுகளுக்கான நிலையான கட்டணம் 300 ரூபாவிலிருந்து 360 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

61 முதல் 90 வரையான மின் அலகுகளுக்கான கட்டணம் 35 ரூபாவிலிருந்து 41 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் நிலையான கட்டணம் 400 ரூபாவிலிருந்து 480 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன், 91 முதல் 120 வரையான அலகுகளுக்கான கட்டணம் 50 ரூபாவிலிருந்து 59 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த அலகுகளுக்கான நிலையான கட்டணம் ஆயிரத்து 180 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இந்த மின்கட்டண உயர்வு ஓராண்டில் மூன்றாவது முறையாக மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச-இ)

## 'போர்ட் சிற்றி' அபிவிருத்திக்கு பெருந்தொகை ஒதுக்கிய சீனா

கொழும்பு, ஒக். 21

கொழும்புத் துறைமுக நகரின் இரண்டாம் கட்ட அபிவிருத்திக்கு சீனா, ஆயிரத்து 565 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப்பந்தம் ஒன்றை உறுதிசெய்துள்ளது என்று கொழும்புத் துறைமுக நகரம் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டாம் கட்ட அபிவிருத்தியில் மெரினாத் திட்டம், மெரினா உணவகம் ,கொழும்பு சர்வதேச நிதி மையத் திட்டம் ஆகிய்வை உள்ளடக்கப்பட்டுள்ளன.

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கொழும்புத் துறைமுக நகரத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கலந்துரையாடிய போதே இந்த ஒப்பந்தம் உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(ச-இ)

### முதலீட்டை ஈர்ப்பதற்கு

## சீன நிறுவனங்களுடன் ரணில் கலந்துரையாடல்

கொழும்பு, ஒக். 21

இலங்கையின் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகளை ஈர்ப்பதற்காக சீனாவின் உயர்மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடியுள்ளார்.

சீனாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ள நிலையில், நேற்று வியாழக்கிழமை சீன தொலைத்தொடர்பாடல் நிர்மாணக் கூட்டுத்தாபனம், சினோபெக் நிறுவனம், பிவைடி நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்களுடன் பேச்சு நடத்தினார்.

இதன்போது இலங்கையின் துறைமுக நகரத்தை சர்வதேச நிதி மத்தியஸ்தானமாக மாற்றியமைத்தல், துறைமுக நகரத்துக்கான புதிய சட்டதிட்டங்களை உருவாக்குதல், துறைமுக நகரத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட நீதி மன்ற மற்றும் வழிகாட்டல் முறைமைகளை உருவாக்குதல் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

அதேபோல் இலங்கையின் போக்குவரத்துக் கட்டமைப்பை மின்சாரத்தின் ஊடாக இயக்குதல், மின் வாகனப் பாகங்களை ஒழுங்கமைத்தல், மின்சார ரயில் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது.

(ச-இ)



## கஜன் - சுலக்சன் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக். 21

கடந்த 2016ஆம் ஆண்டு பொலிஸாரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட பல்கலைக் கழக மாணவர்களான கஜன் மற்றும் சுலக்சன் ஆகியோரது 7ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்தில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. அவர்களது உருவப்படத்துக்கு ஈகச்சுடரேற்றி அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

தொடர்ச்சியாக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் நெவில்குமாரால் நினைவுப் பேருரையும் ஆற்றப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(ஒ-27-125)

## ஏமாற்றிப் பணம் பறிக்கும் கும்பலைச் சேர்ந்தோர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணத்தின் புறநகர்ப் பகுதிகளில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் கும்பலைச் சேர்ந்தவர்கள் நேற்றுமுன்தினம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோசடியை முன்னெடுக்கப் பயன்ப [illegible]

[illegible] (ஒ-

## புதினம் தெரியுமோ?

எங்கட அரசாங்க அதிகாரியளில கனபேர் கழுவிற தண்ணியில நழுவுற வேலையளைப் பார்க்கிறதில கடும் விண்ணர். ஆனால் அப்பிடி இவை எல்லாருக்கும் நல்லபிள்ளையா நடிக்கிறதால, ஒழுங்கான முடிவுகளை எடுக்காமல் தாங்களும் குழம்பி, மற்றவையையும் குழப்புவினம். நேற்றைக்கு ஹர்த்தால் நடக்கப்போகுதெண்டு ஒருகிழமைக்கு முதலே அறிவிச்சாச்சு. ஆனால் நேற்று விடியும்வரை பள்ளிக்கூடப் பிள்ளையளும், பெற்றோரும் 'இண்டைக்கு எக்ஸாம் நடக்குமோ? இல்லையோ' எண்டு தெரியாமல் 'ததிங்கிணத்தோம்' ஆட வேண்டிய நிலைக்கு அதிகாரியள் கொண்டந்திட்டினம். வடக்கு மாகாணத்தில உள்ள எல்லாப் பிள்ளையளும் இந்தப் பதகளிப்போடதான் நேற்றுப் பள்ளிக்கூடத்துக்குப் போனதுகள்.

ஹர்த்தால் எண்டால் பிள்ளையள் பள்ளிக்கூடம் போய் வாறதில கன பிரச்சினையள் இருக்கு. அதோட மழைகாலம் வேற. ஒருவேளை பள்ளிக்கூடம் போனால், திரும்பி வர வாகனம் இல்லாமல் பிள்ளையள் தவிக்க வேண்டியிருக்கும். அதுவும் தூர இடத்தில இருக்கிற பள்ளிக்கூடம் எண்டால் இன்னும் சிக்கல். அதால ஹர்த்தால் எண்டால் பெரும்பாலும் பிள்ளையளைப் பெற்றோர் பள்ளிக்கூடத்துக்கு விடுகிறேலை. ஆனால் இந்தமுறை தவணைச் சோதினை நடக்கேக்க ஹர்த்தால் நடந்ததால என்ன செய்யிறதெண்டு பெற்றோருக்கு ஒரே குழப்பம். இப்பிடி எக்ஸாமுக்கை ஹர்த்தால் வைச்சால் பிள்ளையள் குழம்பும் எண்டு அதை அறிவிச்ச கட்சியள் யோசிக்கேலை. அவைக்கு ஹர்த்தாலை வைச்சால் சரி.

அதைமாதிரி, இப்பிடி ஒரு கிழமைக்கு முதலே ஹர்த்தால் எப்பவெண்டு தெரியுமெண்டதால எக்ஸாமை வைக்கிறதா, இல்லையா எண்டு முடிவெடுக்க கல்வித் திணைக்களத்துக்கும் தேவையான அவகாசம் இருந்தது. ஆனால் அவை அதைச் செய்யேலை. 'வலயக் கல்விப்பணிப்பாளர்மார் எக்ஸாமை வைக்கிறதைப் பற்றி முடிவெடுக்கட்டும்' எண்டு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பந்தை அங்காலிப் பக்கமா எறிஞ்சுபோட்டு தன்ர சோலி முடிஞ்சுதெண்டு போட்டார். அதைமாதிரி 'பள்ளிக்கூட பிரின்சிபல்மார் எக்ஸாம் நடத்திறதை முடிவெடுக்கலாம்' எண்டு வலயக் கல்விப்பணிப்பாளர் மாரும் தங்கட பங்குக்கு பந்தை பிரின்சிபல்மாரிட்ட எறிஞ்சினம். நல்லகாலம் 'எக்ஸாமை நடத்திறதை ஒவ்வொரு வகுப்பு மொனிட்டர்மார் தீர்மானிக்க வேணும்' எண்டு பிரின்சிப்பல்மார் சொல்லேலை.

ஹர்த்தால் எண்டதால, அதுவும் ஒருகிழமைக்கு முதலே தெரிஞ்சதால எக்ஸாமை ஹர்த்தாலுக்கு நடத்தாமல் விட்டிருக்கலாம். இல்லாட்டி அப்பிடி நிப்பாட்டினால் ஏதும் சிக்கல் இருக்குமெண்டால் 'எக்ஸாம் நடக்கும்' எண்டு தெளிவா அறிவிச்சிருக்கலாம். அதைவிட்டிட்டு' அவை முடிவெடுக்கலாம், இவை முடிவெடுக்கலாம்' எண்டு நழுவிறதோ அதிகாரியளின்ர வேலை? இந்த முறை மாகாணக்காரர் தான் எக்ஸாம் பேப்பரை 'செற்' பண்ணினவை. அப்ப வலயக் கல்விப்பணிப்பாளர் மாரோ, அதிபர்மாரோ சோதினை வைக்கிறதை எப்பிடி முடிவெடுக்க முடியும்? ஒரு வலயத்திலையோ, ஒரு பள்ளிக்கூடத்திலையோ எக்ஸாம் வைச்சால், எக்ஸாம் நடக்காத பள்ளிக்கூடங்களுக்கு அண்டைக்கே எக்ஸாம் பேப்பர் 'லீக்' ஆயிடுமே. இதுகூட மாகாணத்தில உள்ள மேதாவியளுக்குத் தெரியாதோ.

சனங்கள் 'எக்ஸாம் நடக்குமோ? இல்லையோ?' எண்டு அந்தரப்பட, அதுக்கு பதில் சொல்ல வக்கில்லாமல் வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளரும், வடக்கு கல்வியமைச்சின்ர செயலாளரும் முந்தநாள் பின்னேரத்தோட தங்கட செல்போனை 'ஓ.ஃ.ப்' பண்ணிப்போட்டு ஒளிச்ச கதையை ஆருக்குச் சொல்லியழ?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியா அபாரம்




உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ் தானை வீழ்த்தி தரப்படுத்தலில் ஏற்றம் கண்டது அவுஸ்திரேலிய அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரே லிய அணிக்கு அந்த அணியின் ஆரம்ப வீரர்களான வோர்ணர், மிச்செல் மார்ஷ் இணை பலமான இணைப்பாட்டத்தை வழங்கியது. மூன்று ஆண்டுக ளுக்கு முன்னர் எவ்வாறு அதகளம் செய்யும் ஆபத்தான வீரரான வோர்ணர் இருந்தாரோ அதே ஆக்ரோசத்துடன் நேற்றைய ஆட் டத்தில் அவர் மீண்டு வந்தார். 10 ஓட்டங்களில் வைத்து வோர் ணரின் பிடியெடுப்பைத் தவறவிட்டமைக்குரிய விலையை பாகிஸ்தான் அணி கொடுத்தது. இருவரும் சதம் கடந்த னர். அணி 259 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 121 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மிச்செல் மாரஷ். மக்ஸ்வெல் ஓட்டமெதையும் பெறாமல் வந்தவேகத்தில் நடையைக் கட்டினார். வோர்ணர் ஒருமுனையில் சிறப்பாக விளையாடிய போதிலும் மறுமுனை பலவீனமாக இருந்தது. ஸ்ரொய்னிஸ் பெற்ற 21 ஓட்டங்களே பின்வரிசையில் அதிக பட்சம். வோர்ணர் 163 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 9 இலக்கு களை இழந்து 367 ஓட்டங்களைப் பெற்றது ஆஸி. பந்துவீச்சில் ஷகீன் ஷா அப்ரிடி 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணியையும் அந்த அணி யின் ஆரம்ப வீரர்கள் பலப்படுத்தவே செய்தனர். இலக்குச் சரிவில் லாமல் அணி 100 ஓட்டங்களைக் கடந்தது. அப்துல்லா ஷபிக் 64 ஓட்டங்களுடன் ஆட்டமிந்தார். இமாம் உல் ஹக் 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இமாமின் ஆட்டமிழப்பு பாகிஸ்தான் அணியைச் சரிவுக்குள் தள்ளியது. பாபர் 18 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். ரிஸ்வான் பெற்ற 40 ஓட் டங்களே மத்திய வரிசையில் அதிகபட்சம். முடிவில் 305 ஓட்டங்களில் சகல இலக்குகளை யும் இழந்தது பாகிஸ்தான். 62 ஓட்டங்களால் வென்றது அவுஸ்திரேலியா. பந்துவீச்சில் ஷாம்பா 4 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ம)

## உதயனின் பரிசுக்குவியல்

தினம் ஒரு பரிசு 17

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இன்றைய (21.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

# நாளைய ஆட்டத்தில் பாண்டியா இல்லை!



உலகக்கிண்ணத் தொடரில் நாளை நடைபெறும் இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கு இடை யிலான ஆட்டத்தில், பாண்டியா விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பங்களாதே ஷுக்கு எதிரான ஆட்டத்தில் பாண்டியா காயம டைந்தார். இதையடுத்து அவர் ஆட்டத்தின் இடைநடுவில் மைதானத்தை விட்டு வெளியே றினார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்து வப் பரிசோதனைகளில் பாண்டியாவுக்கு இலே சான தசைக்கிழிவு ஏற்பட்டுள்ளமை உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது. இதனால் அவர் நாளை நடைபெறும் நியூ ஸிலாந்துக்கு எதிரான ஆட் டத்தில் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. தர்மசாலா சுழலுக்கு அதிகம் ஒத்து ழைக்கும் என்பதால் அஸ்வின் மாற்று வீரராகக் களமிறங்க வாய்ப்புக்கள் உள்ளன. (ம)

### இன்றைய ஆட்டம்

நெதர்லாந்து - இலங்கை

இடம் : லக்னோ
நேரம்: மு.ப. 10.30

### இன்றைய ஆட்டம்

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா

இடம் : வான்கடே
நேரம்: பி.ப. 2.00

## தினம் ஒரு பரிசு நாள் 15 இன் வெற்றியாளர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.அபிசன் | - | வவுனிக்குளம் | கோ.ஜொஷ்வா | - | யாழ்ப்பாணம் |
| ப.தனஞ்சயன் | - | ஆறுகால்மடம் | மா.ஜனோஷசன் | - | யாழ்ப்பாணம் |
| வ.கிருபாகரன் | - | அராலி | எஸ்.ஆத்விகா | - | உரும்பிராய் |
| சி.கிசானிகா | - | யாழ்ப்பாணம் | வி.தனுஷா | - | சில்லாலை |
| வ.பவிசாளினி | - | நெடுங்கேணி | ஜி.கௌதமி | - | நானாட்டான் |
| சா.ஆரணி | - | நெளுக்குளம் | வி.ஜீவனன் | - | கைதடி |
| [illegible] | - | [illegible] | தே.தேனுஸன் | - | ஆனைக்கோட்டை |
| [illegible] | - | [illegible] தெற்கு | | | |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அவர்களின் நீதி அப்படி!

காஸா மீது இஸ்ரேல் கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகின்றது. ஹமாஸ் இயக்கத்துக்கு எதிராக என்று இந்தப் போரைத் தொடக்கியிருக்கும் இஸ்ரேல், பலஸ்தீனத்தவர்கள் மீது குண்டுமழை பொழிந்து வருகின்றது. இலங்கையில் இறுதிப்போரின்போது என்ன நடந்ததோ அதுவே காஸாவிலும் நடக்கின்றது. இறுதிப்போரில் யுத்த சூனிய வலயம் என்று அறிவித்து பொதுமக்களை அங்கு வரவைத்து அந்த இடத்தில் குண்டுகளைப்போட்டு மக்களைக் கொலை செய்தன இலங்கைப் படைகள். இஸ்ரேலும், கால எல்லை நிர்ணயித்துவிட்டு, அது முடிவதற்கு முன்னதாகவே மக்களை வெளியேறச் சொல்லிவிட்டு மக்கள் மீது தாக்குதல் நடத்துகின்றது. பல நூற்றுக்கணக்கான பிஞ்சுகள் இஸ்ரேலின் வெறியாட்டத்தால் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை அரச படைகள் இனவழிப்புப் போரின் ஓர் அங்கமாக சிகிச்சையளிக்கப்படும் மருத்துவமனைகள் மீது எப்படித் தாக்குதல் நடத்தினவோ அதைப்போன்று இஸ்ரேலும் காஸா மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தியிருக்கின்றது. இதில் 700 அப்பாவிப் பொதுமக்கள் வரையில் உயிரிழந்திருக்கின்றார்கள். இலங்கையில் இறுதிக் கட்டத்தில் மனிதாபிமானப் போர் என்று இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தி நடத்திய போரில் முதலில் கொல்லப்பட்டது மனிதாபிமானம்தான். காஸாவிலும் அதுவே நடக்கின்றது.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின்போதான மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான சட்டமீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எல்லாம் நடந்துமுடிந்த பின்னர் இப்போதுதான், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தொடர்ச்சியாக இந்த விடயங்கள் வலியுறுத்தப்படுகின்றன. பல நாடுகள் தங்கள் உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் தத்தமது நாடுகளில் இலங்கையில் போர்க்குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் தலைவர்களுக்குத் தடை விதித்துக்கொண்டிருக்கின்றன. இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதன் பின்னணியிலும் ஏனைய அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் பின்னணியிலும் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலக நாடுகளே முன்னணியில் உள்ளன. அவற்றின் முயற்சியாலேயே இந்த விவகாரங்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

இலங்கையில் நடைபெற்ற குற்றங்களுக்கு நீதியைத் தேடுவதாகக் கூறிக்கொள்ளும் அந்த நாடுகள்தான், இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கும் மிகக் கொடூரமான – மனிதாபிமானமற்ற போருக்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கின்றன. அமெரிக்க ஜனாதிபதி, பிரிட்டன் பிரதமர் ஆகியோர் இஸ்ரேலியப் பிரதமரைச் சந்தித்து ஆதரவு தெரிவிக்கும் அளவுக்கு அவர்கள் இந்தப் போருக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். காஸா மருத்துவமனை மீதான தாக்குதல் அப்பட்டமான போர்க்குற்றம் என்றபோதிலும் அமெரிக்காவோ, பிரிட்டனோ அது தொடர்பில் இஸ்ரேலை 'மென்மையாகக்' கூடக் கண்டிக்கவில்லை.

இந்த இடத்திலேயே ஈழத் தமிழர்களும் தங்களின் நிலையைப் புரிந்துகொள்ளவேண்டும். உலகம் நீதியின் அச்சாணியில் சுழல்வதில்லை. ஒவ்வொரு நாடுகளும் தங்களின் தேவைகளுக்கு ஏற்பவே விடயங்களைக் கையில் எடுக்கின்றன. அந்த வல்லரசுகளின் கருவியாக – அவர்களின் தேவைக்கு ஏற்ப ஆடும் பொம்மைகளாக – மாத்திரமே ஈழத் தமிழர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள் அல்லது அவர்களின் நீதி கோரிய பயணம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி தேடும் பயணத்தில் இந்த நாடுகள் ஒரு போதும் உதவப்போவதில்லை. அவர்கள் தங்களின் தேவைக்காகவே எமது நீதி தேடும் பயணத்தை கையில் எடுத்திருக்கின்றார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இது தீர்க்கப்படவும்கூடாது. தீர்க்கவும்விடக்கூடாது. ஏனெனில் அவர்களின் தேவைகள் நிறைவேறும் வரையிலும், அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வரையிலும் எங்களைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டேயிருப்பார்கள். அதைப் பயன்படுத்தி எங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதைவிட, அந்த நாடுகளின் தேவைக்காக எங்களின் நீதி கோரிய பயணத்தை தமிழ்த் தலைவர்கள் அடகு வைத்துவிட்டார்கள். இதனாலேயே இவ்வளவு காலம் கடந்தும் நீதிதேடும் எமது பயணம் சில அங்குலங்கள் கூட முன்னேறாமல் இருக்கின்றது என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

நான் இன்னும் வாசிக்காத
நல்ல புத்தம் ஒன்றை
வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே
என் தலைசிறந்த நண்பன்.

- ஆபிரகாம் லிங்கன் -



## வன்னிப் போரும் காஸாவும் ஒன்றல்ல

### வீரசேகர முழக்கம்



கொழும்பு, ஒக். 21

**வன்னியில் நடைபெற்ற போருடன் காஸா போரை ஒப்பிடுவது தவறு எனவும், இன்று ஹமாஸ் அமைப்பை எதிர்க்கும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கைப் போரில் புலிகள் பக்கமே நின்றன எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இலங்கை 2 ஆயிரத்து 500 ஆண்டுகளாக ஒற்றையாட்சி நாடாகவே இருந்துவருகின்றது. இதற்காக எமது மூதாதையர்கள் உயிர்த் தியாகம்கூட செய்துள்ளனர். எமது நாட்டை இரண்டாக்குவதற்காகவே புலிகள் போரிட்டனர். அந்தப் போரை நாம் முடிவுக்குக் கொண்டுவந்தோம். ஹமாஸ் அமைப்பின் நோக்கம் வேறு. புலிகளின் நோக்கம் வேறு. காஸா போருடன் இலங்கைப் போரை ஒப்பிடமுடியாது.

ஹமாஸ் அமைப்பை பயங்கரவாதிகள் எனக் கூறி காஸா போரில் இன்று இஸ்ரேல் பக்கம் நிற்கும் மேற்குலக நாடுகள் அன்று ஈழப்போரில் புலிகளுக்காக முன்நின்றன. பிரபாகரனை காப்பாற்றிக்கொள்வதற்காக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் முயற்சித்தன. பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்தார். பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் வந்தார். சமாதான உடன்படிக்கைக்கு முன்மொழிவு செய்யப்பட்டது. அதற்கு இணங்கியிருந்தால் இலங்கையில் இன்றும் குண்டுகள் வெடித்துக்கொண்டுதான் இருந்திருக்கும். ஆனால் காஸாவில் போர் நிறுத்தத்துக்கு மேற்குலகம் விரும்பவில்லை. ஐ.நா.வில் அந்த யோசனையை ஏற்கவில்லை. இஸ்ரேல் பக்கம் நிற்கும் மேற்குலகமே இலங்கைமீது போர்க் குற்றங்களை சுமத்தி வருகின்றது-என்றார். (ஒ-44)

## இறுதிப்போரில் எமக்கு உதவியது இஸ்ரேலே

### முன்னாள் தளபதி சரத் வீரசேகர சாட்சியம்

கொழும்பு, ஒக். 21

இலங்கையில் நடைபெற்ற போரில் இலங்கை இராணுவத்துக்கே இஸ்ரேல் ஆதரவு வழங்கியது. அரசியல் தஞ்சத்துக்காக புலம்பெயர் தமிழ் பிரிவினைவாதிகள் இஸ்ரேல் பக்கம் நிற்கின்றனர். இதன்மூலம் அவர்களின் இரட்டை நிலைப்பாடு வெளிச்சத்துக்கு வந்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் கூறியவை வருமாறு.

ஈழத்தை உருவாக்குவதற்காக புலம்பெயர் தமிழ் பிரிவினைவாதிகள் இன்றும் முயற்சிக்கின்றனர். புலிகளுக்கு ஆதரவு வழங்கிவருகின்றனர். அவர்கள் தங்கியுள்ள நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்துவருகின்றனர். புலிகளுடனான போரில் இலங்கைப் படைகளுக்கே இஸ்ரேல் உதவியது. போர்க்கப்பல் வழங்கியது, ஜெட் விமானம் வழங்கியது, பாதுகாப்பு ஆலோசனை வழங்கியது, பயிற்சிகளை வழங்கியது. புலிகளுக்கு இஸ்ரேல் ஆதரவு வழங்கவில்லை - என்றார். (ஒ-44)

| நாளை | 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி 05 | சுபநேரம் : 09.02 – 10.32<br>ராகுகாலம் : 04.32 – 06.02 |
|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தேவையுடையோருக்கு சிறந்த திட்டங்கள் நடைமுறை

## விரைவில் கொண்டுவருவேன் - வடக்கு ஆளுநர் உறுதி




**யாழ்ப்பாணம், ஒக். 21**

**விசேட தேவையுடையோரின் குறைகளை நிறைவேற்றுவதற்கான சிறந்த திட்டங்களை விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.**

ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கலந்துரையாடலில் சமூகசேவைகள் திணைக்களத்தினரால், மாற்றுத் திறனாளிகளை உள்வாங்குவதற்கான கொள்கையின் வரைவு ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

வரைவில் மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில் வழிகாட்டல், வேலை வாய்ப்பு, அணுகுவசதிகள், சுகாதாரத் தேவைகள், போக்குவரத்து முதலான விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

அது தொடர்பாக கேட்டறிந்த ஆளுநர், இந்த விடயங்களை ஜனாதிபதி செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்று விசேட தேவையுடையோருக்கான சிறந்த திட்டங்களை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்வேன் - என்று தெரிவித்தார். (ச-27-100)



# மகளிர் அமைச்சினால் வாழ்வாதார உதவிகள்

கிளிநொச்சி, ஒக். 21

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன. உதவித் திட்டங்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் சு. ஜெயனந்தராசா தலைமையில் இடம்பெற்றது.

தையல், சிறுகைத்தொழில், உணவுப்பொருள் உற்பத்தி, தோட்டம், சிறுகடை, கோழி வளர்ப்பு ஆகிய வாழ்வாதார உதவித் திட்டங்களே கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் ஹ.சத்தியஜீவிதா ஆகியோர் பங்கேற்று குறித்த உதவித் திட்டங்களை வழங்கி வைத்தனர். (ச-113)



# நாடளாவிய ரீதியாக ஆடு வளர்ப்புத் திட்டம்

## கிளிநொச்சியில் ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21

கமத்தொழில் அமைச்சின் கிராமியப் பொருளாதாரப் பிரிவால் வதிவிடங்களை அண்டிய பகுதிகளில் ஆடு வளர்க்கும் திட்டம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்துக்காகப் பயனாளி ஒருவருக்கு 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆடுகளைக் கையளிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் 33 பயனாளிகளும், கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் 12 பயனாளிகளும், பூநகரிப் பிரதேசசெயலர் பிரிவில் 10 பயனாளிகளும், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசெயலர் பிரிவில் 8 பயனாளிகளுமாக 63 பயனாளிகள் இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட குடும்பங்களுக்கு ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-113-9)

# 'பசிக்கு உணவளிப்போம்' யாழில் முன்மாதிரிச் செயல்



யாழ்ப்பாணம், ஒக்.21

உலக உணவு தினத்தை முன்னிட்டு 2 ஆயிரம் மதிய உணவுப்பொதிகள் வழங்கும் திட்டம் உரும்பிராயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் பொருளாதாரம் நலிவுற்ற மக்களுக்காக உரும்பிராய் வடக்கு மடத்தடியில் இயங்கி வரும் நிறுவனமொன்றால் 'பசிக்கு உணவளிப்போம்' எனும் தொனிப்பொருளில் இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

முதற்கட்டமாக கடந்த திங்கட்கிழமை மருதனார்மடம், யாழ்.நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள 50 யாசகர்களுக்கு உணவுப் பொதிகள் நேரடியாகச் சென்று வழங்கி வைக்கப்பட்டன. (ச- 66)

# இலங்கையைச் சுற்றும் பயணம் கொழும்பில் நிறைவுக்கு வந்தது

யாழ்ப்பாணம், ஒக். 21

உலக சாதனை படைக்கும் நோக்கில் கரையோர வழித்தடத்தின் ஊடாக இலங்கையைச் சுற்றிப் பயணித்து வந்த சாதனைப் பயணம் கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்புத் துறைமுக நகரில் சென்று நிறைவு பெற்றுள்ளது.

காலி, அல்பிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த தடகளப் பயிற்சியாளரான சமன் உடுகம சூரி (வயது- 52) என்பவர் கடந்த செப்ரெம்பர் 8 ஆம் திகதி கொழும்புத் துறைமுக நகரில் இருந்து சாதனை நடைபயணத்தை ஆரம்பித்திருந்தார்.

அங்கிருந்து இலங்கையின் தென் கரையோரத்தினூடாகப் பயணித்து கிழக்குக் கரையோரம் வழியே வடமராட்சி பருத்தித்துறை முனையை கடந்த ஒக்ரோபர் 6ஆம் திகதி வந்தடைந்து வடக்கு கடற்கரையூடாக மன்னார் கரையோரப்பகுதி ஊடாக இலங்கையின் மேற்குக் கரை வழியே தொடர்ந்து 38 நாள்கள் பயணித்து 16ஆம் திகதி கொழும்புத் துறைமுக நகரத்தைச் சென்றடைந்துள்ளார்.

நடை, ஓட்டம், நீச்சல் என கலப்பு நிலையில் மேற்கொண்ட சாதனை பயணத்தை நிறைவு செய்துள்ள சாதனை வீரருக்கு துறைமுகநகர்ப் பகுதியில் வரவேற்பு வழங்கப்பட்டது.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இதற்கு முன்னதாக 2000ஆம் ஆண்டில் இவ்வாறான சாதனை முயற்சியில் இவர் ஈடுபட்ட நிலையில் போர் இடம்பெற்று வந்ததால் வடக்குப் பகுதியில் பயணிக்கமுடியாத நிலையேற்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு இதேபோன்று இலங்கையை கரை வழியாக பயணித்துள்ள போதிலும் குறித்த பயணத்தை உலக சாதனை புத்தகத்தில் சேர்ப்பதற்கு தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியாதிருந்துள்ளது.

இதையடுத்து இம்முறை சாதனை பயணத்தை உறுதிப்படுத்தும் சான்றாதாரங்களுடன் முன்னெடுத்திருந்த சாதனை பயணத்தில் கடற்கரையோரமாக செல்வதில் நிலவமைப்பு காரணமாக சாத்தியமற்றதாகக் காணப்படும் இடங்களில் கடலில் நீந்தியும், ஏனைய இடங்களில் சாலை மார்க்கத்தை தவிர்த்து கடற்கரையோரமாகவே பயணித்தைத் தொடர்ந்தவர் ஓட்டமும் நடையுமாக பயணத்தை நிறைவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-100)



# நிரந்தர நியமனத்தில் 13 வருடமாக 930 சுத்திகரிப்பாளர்கள் புறக்கணிப்பு

## கிழக்கு மாகாணத்தில் கவனவீர்ப்பு

கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சிசபைகளில் பணிபுரியும் 930 சுத்திகரிப்புப் பணியாளர்கள் தமது பணியை நிரந்தரமாக்குமாறு கோரி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகம் மற்றும் மாகாண ஆளுநர் அலுவலகம் என்பவற்றுக்கு முன்பாக கடந்த புதன்கிழமை இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கை யில்,

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களின் உள்ளூராட்சி மன்றங்களிலும் கடந்த 13 வருடங்களுக்கும் மேலாக நாம் சேவையில் உள்ளோம்.

எனினும் 50 வயதைக் கடந்த நிலையிலும் எமது சேவை நிரந்தரமாக்கப்படவில்லை.

எனவே உடனடியாக நாம் நிரந்தர சேவைக்கு உள்வாங்கப்பட வேண்டும் - என்றனர்.

மேலும் தமது கோரிக்கை அடங்கிய மனுவை கிழக்கு மாகாண ஆளுநர் அன்றைய திருகோணமலைக்கு வருகை தராமையால் ஆளுநரின் தனிப்பட்ட செயலாளர் மற்றும் ஆளுநர் செயலகத்தின் உதவிச் செயலாளர் ஆகியோரிடம் கையளித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித் தேர்தல்:

# பணியாற்றிய இடத்தில் மீளப் பணியாற்ற அனுமதி

கொழும்பு, ஒக். 21

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள அரச ஊழியர்கள் உட்பட அனைவரும் அவர்கள் பணிபுரிந்த அதே இடத்தில் மீண்டும் பணியாற்றுவதற்கு அனுமதி வழங்க தேர்தல்கள் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

உள்ளூராட்சிசபைத்தேர்தல் விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

'தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு கடந்த வாரம் அழைப்பு விடுத்திருந்தேன். நானும், இராஜாங்க அமைச்சரும் (ஜானக வக்கும்புர) அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டோம்.

இதன்போது அரச ஊழியர்கள் உட்பட வேட்பாளர் பட்டியலில் உள்ள அனைவரும் அவர்கள் பணியாற்றிய அதே இடத்தில் மீண்டும் பணியாற்ற அனுமதி வழங்குவதற்கு இணக்கம் எட்டப்பட்டது. இதுகூட எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியவில்லை. அதனால்தான் எடுத்த எடுப்பில் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்.

பிரச்சினைகள் கட்டம், கட்டமாகத் தீர்க்கப்படும். எதிர்க்கட்சியினர் என்பது எதிர்க்கட்சித் தலைவர் மட்டும் அல்லர்.

எனவே, எதிரணி உறுப்பினர்கள் யோசனைகளை முன்வைக்கலாம். எனவே, ஆராய்ந்து பார்க்காமல் குற்றச்சாட்டுகளை முன்வைப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல.' - என்றார்.

(ஒ-44)

## தேர்தலை

# ஒத்திவைக்கவோ இரத்துச்செய்யவோ உடன்படவில்லை

கொழும்பு, ஒக். 21

உள்ளூராட்சிசபைத்தேர்தலை ஒத்திவைக்கவோ அல்லது வேட்புமனுக்களை இரத்துச் செய்யவோ பிரதான எதிர்க்கட்சி உடன்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது,

'பட்டதாரிகள் சிலரின் வேலை வாய்ப்புப் பிரச்சினை, கிராமஅலுவலர்கள் சிலரினது பிரச்சினை மற்றும் ஆள்சேர்ப்புப் பிரச்சினை போன்ற பல விடயங்கள் தொடர்பில் கருத்துகளை முன்வைக்கவே அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் நான் பங்கேற்றேன்.

எனது கருத்துகளை முன்வைத்த பின்னர், அங்கிருந்து வெளியேறினேன். ஆனால் தேர்தலை ஒத்திவைப்பதற்கு நாம் இணங்கினோம் எனத் தகவல் பரப்பப்பட்டது. கூட்டம்தொடர்பான வீடியோ உள்ளது. அதனை வெளியிட அரச தரப்பு அனுமதி வழங்காமல் உள்ளது. ஆலோசனைக்குழுவில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள், குறிப்பு பதிவேட்டில் இருக்கும்.

அந்தக் குறிப்புகளை சபையில் சமர்ப்பிக்குமாறும் கோருகின்றேன். தேர்தல் ஒத்திவைப்பு, வேட்புமனுத் தாக்கல் இரத்து பற்றி நான் கதைக்கவில்லை. வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ள அரச ஊழியர்கள் பற்றி கதைக்கப்பட்ட விவகாரத்தை வைத்து, வேறு கோணத்தில் பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது.' என்றார். (ஒ-44)

# மதுபானநிலையத்தை எதிர்த்து மக்கள் போர்

கிளிநொச்சி, ஒக். 21

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக, மதுபான நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதான வீதியை மறித்து மக்கள் நேற்றுமுன்தினம் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

நேற்றுமுன்தினம் மு.ப. 10 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டத்தால் சுமார் ஒரு மணிநேரம் பிரதான வீதியின் போக்குவரத்துப் பாதிப்படைந்தது. அதன்பின்னர் சம்பவ இடத்துக்கு வருகைதந்த பொலிஸார் பொதுமக்களுடன் கலந்துரையாடி போக்குவரத்தைச் சீர்செய்தனர். போராட்டத்தின் ஒரு பகுதியாக பிரதேசசெயலரிடம் மக்களால் மனுவொன்றும் வழங்கப்பட்டது.

மருத்துவமனை, பிரதேச செயலகம், பிரதேசசபை, கமநலசேவைகள் திணைக்களம், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், தொழிற்பயிற்சி நிலையம், விளையாட்டு மைதானம், பெண்கள் தொழில் நிலையம் என முக்கியமான சேவை நிலையங்கள் உள்ள பகுதியில் அனுமதிக்கப்பட்ட குறித்த மதுபான நிலையத்துக்கான உரிமத்தை உடனடியாக இரத்துச் செய்து சமூக விரோதச் செயல்கள் இடம்பெறாமல் பாதுகாக்கவேண்டும் என்று அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(ம-113)

**“ தமிழ் மக்களை இலங்கை அரசு தாக்கி அழித்தமை இன்றும் ஆறாவடுவாகவுள்ளது. அதேபோன்று ஒடுக்கப்படுகின்ற பலஸ்தீனிய மக்களுக்காக நாம் இப்போது குரலெழுப்பாவிடின் வரலாறு எம்மை ஒருபோதும் மன்னிக்காது ”**

# ஒடுக்கப்படும் பலஸ்தீனருக்கு ஆதரவாகக் குரல்கொடுப்போம்

## பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 21

இலங்கையில் இனவழிப்புக்கு முகங்கொடுத்த ஈழத்தமிழ் மக்கள் போன்று இஸ்ரேல் நிகழ்த்திவரும் தாக்குதலில் இனவழிப்புக்குள்ளாகும் பலஸ்தீன மக்களுக்கு மனதளவில் துணைநிற்போம் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேல் மீது தாக்குதல்களை மேற்கொண்டதையடுத்து இஸ்ரேல் காஸாவின் மீது கொடூரமாகப் போர்தொடுத்துள்ளது.

பலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காஸா நிலப்பரப்பை இஸ்ரேல் 1967 ஆம் ஆண்டு பலவந்தமாக ஆக்கிரமித்ததையடுத்து அங்கு வாழும் பலஸ்தீனர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

உலகின் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதியாக விளங்கும் காஸாவில் 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசிக்கிறார்கள். இந்த மிகக்குறுகிய காஸா நிலத்துண்டில் பலஸ்தீனியர்களை இஸ்ரேல் கொன்று குவித்து வருகிறது.

தமிழ் மக்களை இலங்கை அரசு தாக்கி அழித்தமை இன்றும் ஆறாவடுவாகவுள்ளது. அதேபோன்று ஒடுக்கப்படுகின்ற பலஸ்தீனிய மக்களுக்காக நாம் இப்போது குரலெழுப்பாவிடின் வரலாறு எம்மை ஒருபோதும் மன்னிக்காது- என்றார். (ச-27)

# குப்பிழான் சிவபூமி வாணி விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக். 21

குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் வாணி விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆச்சிரமத்தின் சிவபூமி அரங்கில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், இளைப்பாறிய கிராம அலுவலர் சோ.பரமநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சிறப்புரையை அதிபர் நா.விஜயசுந்தரம், ஆசியுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலைவர் சிவஸ்ரீ ம.பாலகைலாசநாத சர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ச-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பண வரவு கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள். திடீர் ஆதாயம் கிடைக்கக்கூடும்.

**மிதுனம்** : புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். இலாபம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** : தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். பிறருடன் பேசுவது மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்கு சிறிய அளவில் கடன் வாங்க நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்

இம்மாதம் 21 ஆம் திகதி முதல் தீபாவளி தினம் வரை

# இந்தியன் செலக்ஷன்

## தீபாவளி ஜவுளிக் கொண்டாட்டம்



பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் டொப், பாட்டி புரொக், சேட், ரீ சேட், டெனிம் ஜீன்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகளையும் இன்னும் மங்கையர் மனங்கவரும் ஆடைத் தெரிவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

## விஷேட விலைக்கழிவு

டொப் 500/=

ரெடிமேட் சல்வார் 750 /=

கையிருப்பு உள்ளவரை மட்டுமே


காலம்: இன்று (21.10.2023) முதல் தீபாவளி தினம் வரை

இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 01 . 1935

இறப்பு 20 . 10 . 2023

### ஆறுமுகம் ஞானசேகரம்

கொல்லன்கலட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஞானசேகரம் நேற்று (20.10.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - மங்கையர்கரசி தம்பதியரின் அன்பு மகனும், கந்தசாமி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ந.சிவகாமசுந்தரி (அமெரிக்கா), காலஞ்சென்ற ஈ.அன்னலட்சுமி, காலஞ்சென்ற ஆ.கணேச லிங்கம், து.கிரிசாம்பாள் (கொழும்பு), ஆ.சண்முகலிங்கம் (நீர்கொழும்பு), காலஞ்சென்ற ஆ.கமலாம்பிகை, ஆ.சிறினிவாசன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞா.கலாவதியின் அன்புக் கணவரும், ஞா.செந்தூரன் (UK), ஹ.பகீரதி (Newzealand) ஆகியோரின் அன்பு தகப்பனாரும், Humphreys ன் அன்பு மாமனாரும், Meeya, Jasper ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை மயானகாண்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கொல்லன்கலட்டி,
கேணியடி, தெல்லிப்பழை.
076 000 5224

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 20368) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 10 . 1961

மறைவு 19 . 10 . 2023

### ராஜ்குமார் அருணாசலம்

யாழ். கொக்குவில் நாமகள் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், கனடா Woodbridge ஐ வதிவிட மாகவும் கொண்ட ராஜ்குமார் அருணாசலம் அவர்கள் கடந்த (19.10.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், ஆவரங்காலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், மேகலா அவர்களின் அன்புக் கணவரும், வினுஷா, விதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இரத்தினகுமார், அருணகுமார் (லண்டன்), நந்தகுமார் (லண்டன்), நிமலகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தபோநிதி (லண்டன்), சிவகுமுதினி (லண்டன்), சிவதர்ஷினி (லண்டன்), மகேசன்(கனடா), யசோதா(கனடா), விமலா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நந்தினி(கனடா), ஜெயம்(கனடா), குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை Lotus Funeral and Cremation Centre 121 Cityview Dr, Etobicoke on M9w5A8 கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

தகவல்: உடன்பிறவாத சகோதரி - பா. தவரஞ்சினி
நாமகள் ஒழுங்கை, கொக்குவில்.

(cs 52557 (N.1)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

### பேரின்பநாதன் சாரதாதேவி

(லலி - வேலணை)



தோற்றம்
14.11.1956

மறைவு
21.10.2018

பாசத்தின் உறைவிடம்
தாயுமானவள்...

ஐந்து ஆண்டுகள் சக்கரமாக
சூழன்ற போதிலும்
உங்கள் பிரிவின் துயரம்
எம்மை விட்டு விலகவில்லை
- அம்மா

தன்னை உருக்கி எம்மை
உருவாக்கிய அம்மாவை
காண தவிக்கும் கண்களின்
ஏக்கம் என்றும் குறையாது
- அம்மா...

காலங்கள் கடந்தாலும்
கனவுகள் தொலைந்தாலும்
அம்மாவின் அன்பும் அரவணைப்பும்
பொய்யாகி போனதில்லை என்றும்....

மனம் மகிழ்ந்த நேரத்தை விட
மனம் உடைந்த போது
அருகில் நின்று வா என்று
அழைத்தது கனவாகிலும் நினைவில் நின்றது அம்மா....

ஆயிரம் சொந்தங்கள் இருந்தாலும்
நம் உள்ளத்து உணர்வுகளை
அறிந்து அணைத்திட்ட ஒரு
தெய்வம் என்றும் நீதானம்மா

அன்றும் இன்றும் என்றும்
மனம் சோர்ந்து தோல்வி தருகையில்
தோள் தட்டி புன்னகைத்து
கை கொடுத்து தாக்கிய தெய்வமும் ஆனாயே - அம்மா


கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் அம்மா....

தாய் மடிக்கு ஏங்கும் பிள்ளைகள்
பிரசாந்தன் (யாழ்), துசிக்கா (கனடா),
ருசாந்தன் (சுவீடன்)

(N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## ராஜ்குமார் அருணாச்சலம்

எமது கழக உறுப்பினர் திரு அருணகுமார் அருணாச்சலம் (U.K) அவர்களின் அருமை தம்பி ராஜ்குமார் அருணாச்சலம் அவர்கள் கனடாவில் 19.10.2023 அன்று காலமாகிவிட்டார். இவர் கொக்குவில் நாமகள் வீதியை பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டவர். இவர்களது குடும்பமே எமது கழகத்தின் வளர்ச்சிக்கும் சமூகத்திற்கும் பல்வேறு வகைகளில் சேவையாற்றியவர்கள். இவரது மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன் இவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலினையும் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்,**
**வளர்மதி நிறைவாழ்வகம்.**
**சம்பியன் லேன், கொக்குவில்.**

(CR 40673) M-1

" ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம "

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 19.09.2023 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்ப தலைவி

**அமரர் திருச்செல்வம் உருத்திரமணிதேவி.**

அவர்களின் ஆத்மசாந்தி பிரார்த்தனை நாளை (22.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவில் மண்டபத்தில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.மேலும் அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசியிலும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்"**


**34, கேசாவில் வீதி,**
**வண்ணார் பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

CS 26665 M-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 06 1943



மறைவு 18 10 2023

## வைற்றஸ் றொட்றிகஸ்

**(ஓய்வுபெற்ற ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன பிரதம இலிகிதர்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.61, விபுலானந்தர் வீதி, அரியாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வைற்றஸ் றொட்றிகஸ் அவர்கள் 18.10.2023 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றொட்றிகஸ் - சிசிலியா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் பொன்னம்பலம் - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வரதலட்சுமி (வரதா - ஓய்வுபெற்ற உப்புக் கூட்டுத்தாபன நிர்வாக உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு கணவரும், சுகன்யா (ஜேர்மனி), பிரியந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராம் (ஜேர்மனி), தர்ஷா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கெவின், ஹென்றி (ஜேர்மனி), செயோண், ஹஸ்ஸ்ரீத்தா, தருணிகா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், பிலோமினா, எலிசபேத், காமல் அனாபெல், கில்டா, கிறிஸ்ரீன், மல்லிகா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்திரன், சண்முகநாதன், றொக்ஸி, செல்வராஜா, காலஞ்சென்ற சௌந்தரம், இராமகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.10.2023) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.61, விபுலானந்தர் வீதி, அரியாலையில் உள்ள அன்னாரின் வசிப்பிடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி இடம்பெற்று யாழ். புனித மரியன்னை பேராலய கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**இல.61, விபுலானந்தர் வீதி,**
**(புங்கன்குளம் புகையிரத**
**நிலையம் அருகாமை)**
**அரியாலை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**சுகன்யா (மகள்)** +4915733290962
**பிரியந்தன் (மகன்)** +1(416)710-4253
0777865512

(CS 26660) A-1

# உணவுப் பாரம்பரியத்தில் கலாசாரம் இணைப்பு!

## யாழ். பல்கலை விவசாய பீடத்தில் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஒக். 21

உணவு மற்றும் பாரம்பரியத்தின் மூலம் கலாசாரங்களை இணைத்தல் குறித்த உரையாடலும் சர்வதேச உணவு தின நிகழ்வும் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மற்றும் இலங்கை ரஜரட்ட பல்க லைக்கழகம் ஆகியவை இணைந்து சமூக நல்லிணக்க மையங்கள் சார்பில் உணவு களைத் தயாரித்து பரிமாறிக் கொண்டன.

விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.வசந்தரூபா தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்தின் துணைவேந்தர் பேரா சிரியர் எஸ்.ஸ்ரீ சற்குணராஜா, ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக் டர் ஜே.எம்.எஸ்.பி. ஜெயசுந்தர, யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் பேராசிரி யர் கே.கஜபதி, யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்தின் பொறியியல் பீடாதி பதி கே. பிரபாகரன் மற்றும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மாணவர் கள், யாழ்ப்பா ணப் பல்கலைக்க ழகத்தின் மாண வர்கள் எனப் பலர் கலந்துகொண்ட னர்.

(ச-113)

# நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் எல்லாவிதமான இனத்தவர்களுக்கும் அரசாங்க வேலை அரச சார்பற்றவர்கள், இஞ்சினியர், டொக்ரர், ஆசிரியர்கள், எல்லா உத்தியோகத்தவர்களும் செவ்வாய் குற்றம் அற்றவர், செவ்வாய் உள்ளவர்கள், சூரியன், செவ்வாய் உள்ளவர்கள் எல்லோருக்கும் எம்மிடம் வரன்கள் உள்ளன. அவற்றை துரிதமாகவும் எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும்.

**தொடர்பு : வி.ஜெயந்தி**
**T.P:077 97 33 183**

(CS 26667) A-1

# 36 ஆம் ஆண்டு நினைவு தினம்



இந்திய இராணுவத்தினரால், யாழ் போதனா வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அம்புலன்ஸ் சாரதியான

**அமரர் வைத்திலிங்கம் சண்முகலிங்கம்**

உள்ளிட்ட 21 பேர் படுகொலை செய்யப்பட்டு 36 ஆம் ஆண்டு நினைவு தினமான இன்று அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 31.12.1939 மறைவு 21.10.1987


திதி: சதுர்த்தசி

திருமதி சண்முகலிங்கம்
குடும்பத்தினர்.
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(cs26654) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 02 1971



மறைவு 20 10 2023

## கணேசலிங்கம் சதீஸ்

**( சமுர்த்தி உத்தியோகத்தர் - கோண்டாவில்)**

கணேசலிங்கம் சதீஸ் நேற்று (20.10.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கணேசலிங்கம் சரஸ்வதி தம்பதிகளின் கனிஸ்ட புத்திரனும் ரவி, காலஞ்சென்ற ரமேஸின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தங்கம்மாவின் பெறா மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நடராஜ யோகநாதனின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இலக்கம் 499, பிரதான வீதி, கொழும்புத்துறையிலுள்ள இல்லத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்று நல்லடக்கத்திற்காக Assembly of god கெலன்தோட்டம் வசந்தபுரம் சேமக்காலையில் அன்னாரின் சரீரம் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**0779260128, 0776103546** **தகவல்: குடும்பத்தினர்.**

(CS 26674) M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண விவசாயிகளுக்கு

# உரிய நேரத்தில் உரம் கிடைக்கும்

விவசாயத்துறை அமைச்சர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 21

**வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நேரத்தில் உரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

வடமாகாணத்துக்கு அண்மையில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவர், மாகாணத்தில் பரவலாக இடம்பெற்ற துறை சார் திட்டங்களில் கலந்துகொண்டார். இதன் ஒரு பகுதியாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், நாட்டின் உள்நாட்டு உற்பத்திக்கு வடமாகாணத்தின் விவசாயச் செயற்பாடுகள் பெருமளவு பங்களிப்பதாகவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், உடனடியாகத் தீர்க்கப்படக்கூடிய விடயங்கள் தொடர்பிலும் உரிய அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கினார். கடந்த காலத்தில் வறட்சியால் ஏற்பட்ட இழப்பை நிவர்த்திசெய்யும் பொருட்டு விவசாயிகளுக்கு இழப்பீடும் வழங்கப்பட்டது. (ம-27-19)



## சந்நிதி ஆச்சிரமத்தால் சத்துணவுப்பொதிகள்

யாழ்ப்பாணம், ஒக். 21

சந்நிதியான் ஆச்சிரமத்தால் பொருளாதாரம் நலிவுற்ற 29 குடும்பங்களுக்கு சத்துணவுப் பொதிகள் கடந்த புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

தொண்டைமானாறு தெற்கு ஜே/383, கெருடாவில் தெற்கு ஜே/385, கெருடாவில் வடக்கு ஜே/386 ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கே இந்த சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சத்துணவுப் பொதிகளை வழங்கி வைத்தார். (ச-66)

## குரலைகளை நசுக்கவே நிகழ்நிலை காப்புச் சட்டம்!

அலிஸாஹிர் மௌலானா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.21

நாட்டுமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்காகவும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதைத் தடுப்பதற்காகவே அரசாங்கம் நிகழ்நிலை காப்புச் சட்டத்தை கொண்டுவந்திருக்கிறது. இத்தகைய சட்டங்களுக்கு இடமளிக்கக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் தற்போதைய நிலையில் மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள சட்ட வரைவுகள் சில மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன.

தற்போது பெரிதாகப் பேசப்பட்டு வரும் நிகழ்நிலை காப்புச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் போன்றவை நாட்டு மக்கள் மீது பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. அவை அடிப்படை உரிமைகளை மீறுவனவாகவும் காணப்படுகின்றன. இலங்கை போன்ற ஜனநாயக நாட்டுக்கு இத்தகைய சட்டங்கள் எவ்வகையிலும் பொருத்தமற்றவை.

பல்லின மக்கள் வாழும் எமது நாட்டுக்கு இத்தகைய காட்டுச்சட்டம் எந்தவகையிலும் பொருத்தமில்லை. நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காகவும் நாட்டின் இறைமையை பாதுகாப்பதற்காகவும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதைத் தடுப்பதற்காகவே அரசாங்கம் இத்தகைய அடக்கி ஒடுக்கும் சட்டங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறது.

மக்கள் நலன் மற்றும் நாட்டின் நலனையும் சிந்திக்க கடமைப்பட்டுள்ள உயரிய நிறுவனமான நாடாளுமன்றம் அத்தகைய சட்டங்களை ஆதரிக்க இடமளிக்கக் கூடாது. நாட்டுக்குப் பொருத்தமில்லாத 2 சட்ட வரைவுகள் தொடர்பில் சிலர் நீதிமன்றங்களில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளதை நாம் வரவேற்கிறோம் - என்றார். (ஏ-இ)

## இந்தோ - இலங்கை இடையே உறவை வலுவூட்ட ஒப்பந்தம்

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

இந்து சமுத்திரத்தின் அடையாளத்தை ஸ்திரப்படுத்த இலங்கைக்கும் - இந்தோனேசியாவுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

"ஒரே பட்டி - ஒரே பாதை" சர்வதேச மாநாட்டில் பங்கேற்பதற்காகசீனாசென்றுள்ளஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கும் இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவுக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு கடந்த புதன்கிழமை பீஜிங்கில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அண்மைய பொருளாதார நெருக்கடி மற்றும் பாம் ஒயில் மீதான தடை காரணமாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாக்கம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

உலகப் பொருளாதாரம், அரசியல் போக்குகள் மற்றும் ஆசிய பிராந்தியத்திலுள்ள சிறிய நாடுகள் என்ற வகையில் அந்தச் சவால்களை எவ்வாறு எதிர்கொண்டது என்பது குறித்து இருநாட்டுத் தலைவர்களும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

ஆசிய நாடுகள் பலவற்றுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்ள இலங்கை செயற்பட்டு வருகிறது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.



இந்தோனேசியாவுக்கும் இலங்கைக்குமிடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்குப் பொருத்தமான தருணம் இதுவென்று இந்தோனேசிய ஜனாதிபதி தெரிவித்தார். (ச-44)

## இலங்கையை டிஜிற்றல் மயமாக்க ஹுவாவியுடன் புதிய ஒப்பந்தம்!

ஜனாதிபதி கைச்சாத்து

கொழும்பு, ஒக். 21

எதிர்கால உலகை வலுவாக எதிர்கொள்ள இலங்கைப் பாடசாலைகளை டிஜிற்றல் மயமாக்குவதற்கு சீனாவின் ஹுவாவி நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தமொன்றை இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.

சீனாவுக்கான 4 நாள்கள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பீஜிங்நகரிலுள்ள ஹுவாவி நிறுவனத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான மத்திய நிலையத்துக்குச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க;

இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் கலந்தாலோசிக்கவே ஹுவாவி நிறுவனத்துக்கு வந்துள்ளோம். டிஜிற்றல் கல்வி முறைமை மற்றும் பசுமை வலுச்சக்தி உற்பத்தி தொடர்பில் சீன அரசாங்கம் மற்றும் ஹுவாவி நிறுவனத்தின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும் - என்றார்.

இதன்போது ஹுவாவி நிறுவனத்தின் சர்வதேச சேவைகள் மற்றும் அவர்களின் நவீன தொழில்நுட்ப செயன்முறைகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பிலும் இலங்கைத் தூதுக்குழுவுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் இலங்கைப் பாடசாலைகளை டிஜிற்றல் மயமாக்குவதற்கான ஒத்துழைப்புகளை வழங்குவது தொடர்பிலான ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன, தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோர் இந்த நிகழ்வில் உடனிருந்தனர். (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹர்த்தாலால்...

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் மற்றும் தீர்ப்பை மாற்றியெழுதுமாறு பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் என்பவற்றைக் கண்டித்தும், கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் தரவைகள் என்பன சிங்களக் காடையர்களால் பறிக்கப்படுகின்றமைக்கு எதிராகவும், தமிழ்த் தேசியக் கட்சிகளால் வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் நேற்றையதினம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

சட்டத்தரணிகள், வணிகர்கள், சந்தை வியாபாரிகள், தனியார் போக்குவரத்துத் துறையினர், பொது அமைப்புகள் உள்ளிட்ட பல தரப்பினரும் ஹர்த்தாலுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில், தமிழர் தாயகத்தின் இயல்பு வாழ்வில் நேற்றுப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

தனியார் போக்குவரத்துச் சேவைகள் நேற்றையதினம் முற்றாக நிறுத்தப்பட்டன. அரச போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங்கின. பரீட்சைக் காலம் என்பதால் மாணவர்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் பாடசாலைகளுக்குச் சென்றனர். பேருந்துக்காக மாணவர்கள் நீண்டநேரமாக வீதியில் காத்திருந்தமையை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

சட்டத்தரணிகள் நேற்றுப் பணிகளில் இருந்து விலகினார்கள். இதனால் நேற்று அழைக்கப்பட்ட பல வழக்குகள் தவணையிடப்பட்டன.

அநேகமான உணவகங்கள் மூடப்பட்டிருந்தபோதிலும், ஒரு சில உணவகங்கள் திறந்திருந்தன. முஸ்லிம் மக்களும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்திருந்தமையால், வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் பல நேற்று பூட்டப்பட்டிருந்தன. அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் எவையும் இடம்பெறவில்லை. (அ-ம.26,27,9,159,113,19,150,125,66)

## வங்காள...

இதுதொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்ட தகவலில் மேலும் உள்ளதாவது:-

மேற்கு மத்திய வங்காள விரிகுடாவில் காற்றமுத்தத் தாழமுக்கம் ஒக்ரோபர் 23ஆம் திகதியன்று வலுப்பெற வாய்ப்புள்ளது. இதனால் தற்காலிகமாக பலத்தகாற்று வீசக்கூடும். காற்றானது தென் கிழக்குத் திசையிலிருந்து வீசலாம். இதன் வேகமானது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோமீற்றர் வரை காணப்படும். காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது - என்றுள்ளது. (அ-ம)

## அரசியல்...

வுடன் இணங்கிச் செயற்படுவதே எனது நோக்கம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் சீன ஜனாதிபதி ஜின் பிங்.

சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சீன ஜனாதிபதி ஜின்பிங் ஆகியோருக்கிடையிலான இருதரப்புச் சந்திப்பு சீன மக்கள் பொதுச்சபையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போதே சீன ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்துக்கு



இலங்கை வழங்கும் ஆதரவுக்கு சீன ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். மேலும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்குத் துரித ஒத்துழைப்புகளை வழங்கத் தயாரெனவும் சீன ஜனாதிபதி உறுதியளித்தார். பாகியன் பிக்கு மற்றும் ஷென் ஹர் ஆகியோரின் குறிப்புகள் ஊடாக சீன - இலங்கை நட்புறவு தொடர்பிலான பல்வேறு வரலாற்றுத் தகவல்கள் தெரியவருவதாகவும் ஜின்பிங் சுட்டிக்காட்டினார்.

இதன்போது, ஆரம்பகாலம் முதல் சீனா இலங்கைக்கு வழங்கி வந்துள்ள ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில், ஜின்பிங் தொடர்ச்சியாக இலங்கையுடன் சிநேகபூர்வமானதும், சுமுகமானதுமான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றமையையும் பாராட்டினார்.

சீனா, மியான்மர், இலங்கை, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள், ஒரே சமுத்திரத்தை அண்டிய வர்த்தக துறையாக மாற்றியமைக்கப்படவேண்டும் என்பதே இலங்கையின் நோக்கமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியிருந்த நிலையில், அது மிகவும் செயலாற்றல் மிக்க விடயமென ஏற்றுக்கொண்ட சீன ஜனாதிபதி, அதற்கான ஆரம்பத்தை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணிலிடம் வலியுறுத்தினார். இந்து சமுத்திரத்தின் பொருளாதாரக் கேந்திர நிலையமாக இலங்கையை அபிவிருத்திச் செய்ய வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (அ-ம-44)

## டயானா மீது...

டயானா கமகே குற்றஞ்சாட்டினார். நாடாளுமன்றத்தில் நேற்று விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் திடீரென சபைக்கு வந்த டயானா,

நாடாளுமன்ற வாசிகசாலை வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மின் உயர்த்திக்கு அருகாமையில் வைத்து, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேரா என்னைத் தாக்கினார். இது தொடர்பில் சபாநாயகர் விசாரணை நடத்தவேண்டும். குறித்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளேன். தனது மனைவியையும் தாக்கும் நபர்தான் சுஜித் பெரேரா. கீழ்த்தரமான நபர்கள்தான் இப்படிச் செயற்படுவார்கள். நாடாளுமன்றத்தில் இராஜாங்க அமைச்சரைத் தாக்கும் ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு பெண் உரிமை பற்றி கதைக்க அருகதை இல்லை. இதற்கு எதிராக நான் வீதியில் இறங்குவேன்' - என்றார்.

இதனையடுத்து இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பிரதமர்,

'இது பாரதூரமான குற்றச்சாட்டாகும். இதற்கு முன்னர் இப்படி நடந்ததில்லை. சபாநாயகரிடம் விடயங்களைத் தெரியப்படுத்துவதற்காக சபை நடவடிக்கையை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கவும்' என்றுகுறிப்பிட்டார்.

இதன்பிரகாரம் சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன. (அ-ம-44)

## டயானா...

சுஜித் பெரேரா. இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டையடுத்து 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சபை, மீண்டும் கூடியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கூறினார்.

'நான் தாக்கவில்லை. அவர் (டயானா) அவதூறான வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தார். இப்படிச் செயற்பட வேண்டாம் எனக் கூறினேன். அதன் பின்னர் என்னைத் தாக்க முற்பட்டார். அதனை நான் தடுக்கவே முற்பட்டேன். 'சி.சி.ரி.வி.' காட்சிகளை எடுத்து பார்த்தால் அவர் எப்படிச் செயற்பட்டார் என்பது தெரியும். எனவே, பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்துங்கள்' - என சுஜீவ பெரேரா மேலும் தெரிவித்தார். (அ-ம-44)

## கிளைமோர்...

சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சி, சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கும் பொருளாதார மத்திய நிலையத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள வயலில் இருந்தே இந்தக் கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-100)

## மின்கலம்...

கொக்குத்தொடுவாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேம்படிச் சந்தி, வெலிஓயா செல்லும் வீதியில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், தமது பணிக்காக நேற்றுக் காலை சென்றிருந்தனர். இதன்போது அவர்கள் வைத்திருந்த மின்கலமொன்று பெரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. இதன்போது கண்ணிவெடி அகற்றும் பணிக்காக வந்திருந்த நான்கு ஊழியர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகி முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## அரசமைப்புப்...

கிழமை சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்புப் பேரவை பொலிஸ்மா அதிபர் ஒருவரை 3 தடவைகளும் நியமிக்காமல் இருப்பது போதைப்பொருள் வியாபாரி ஒருவரின் தேவைக்கே என இரண்டு அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படுகின்ற, ஜனாதிபதி பொறுப்புக்கூற வேண்டிய 2 நிறுவனங்களே இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கின்றன. அதனால் அரசமைப்புப் பேரவை பாதுகாக்கின்ற போதைப்பொருள் வியாபாரி யார்? என்பதை நாங்கள் அறிந்துகொள்ள வேண்டும். அதற்காக இந்த பத்திரிகைகளின் ஆசிரியர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்து இது தொடர்பாகக் கேட்கவேண்டும்.

அரசமைப்புப் பேரவை யாருடைய தேவைக்கும் பொலிஸ்மா அதிபரை நியமிக்கத் தயாரில்லை. போதைப்பொருள் வியாபாரிகளை பாதுகாக்கவும் நாங்கள் தயார் இல்லை. ஆனால், நிலையான பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனெனில் ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்று, 2 தடவைகள் பதவி நீடிப்புக்கு அனுமதியளித்தோம். வரக்கூடிய அனைத்து நியமனங்களுக்கும் 'ஆமாம்சாமி' போட அரசமைப்புப் பேரவையொன்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவல்ல என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

எனவே அரசமைப்புப் பேரவை போதைப்பொருள் வியாபாரிகளைப் பாதுகாப்பதாக அரச பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கும் செய்தி, அரசமைப்புப் பேரவை உறுப்பினர்களான சபாநாயகர், பிரதமர், ஜனாதிபதியின் பிரதிநிதி, பெரமுனவின் பொதுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவரான நான், கபீர் ஹாசிம் மற்றும் சிவில் அமைப்பைச் சேர்ந்த 3 பேருக்கு எதிரான பெரும் குற்றச்சாட்டாகும். அதனால் இந்தப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு எதிராக நாங்கள் சட்ட ரீதியில் நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ-ம)

## பாடசாலைகளில்...

களும், ஆசிரியர்களும் ஹர்த்தாலை வெற்றிபெறச் செய்வதற்காகக் கல்வி நடவடிக்கைகளைப் புறக்கணிக்குமாறு ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்த தமிழ்த் தேசியக் கட்சிகளால் கோரப்பட்டிருந்தாலும் வடமாகாணக் கல்வித் திணைக்களம் இது தொடர்பில் உரிய தெளிவூட்டலை வழங்கவில்லை. கல்வி வலயங்களே பரீட்சைகளை நடத்துவது தொடர்பில் இறுதி முடிவெடுக்கவேண்டும் என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்திருந்தார். எனினும், கல்வி வலயங்கள் எந்தவொரு உறுதியான முடிவையும் மாணவர்களுக்குத் தெரியப்படுத்தவில்லை. இதனால், மாணவர்கள் நேற்றையதினம் பெருவாரியாக பாடசாலைகளுக்குச் சென்றனர். அத்துடன், ஆரம்பப்பிரிவு மாணவர்களின் வருகை மாத்திரமே வீழ்ச்சியடைந்திருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-27-26)

## கச்சா...

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான மோதல் ஏற்பட்ட மறுநாளே கச்சா எண்ணெய்யின் விலையில், சுமார் 5 வீதமளவுக்கு ஏற்றம் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக சர்வதேச சந்தையில் நேற்றும் கச்சா எண்ணெயின் விலையில் ஏற்றம் ஏற்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (அ-ம)

## யாழ்...

போதனா மருத்துவமனையிலும், தமிழர் தாயகத்தின் இதர பகுதிகளிலும் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன.

1987ஆம் ஆண்டு 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் போதனாவுக்குள் இந்திய இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில், மருத்துவமனையில் கடமையில் இருந்த மருத்துவர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் என 75க்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் 36ஆவது அஞ்சலி நிகழ்வுகளே இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PACKING வேலை - கோண்டாவில்

நிறுவனம் ஒன்றின் கோண்டாவில் தாவடி கிளையில் BOTTLE லேபலின்ங். பக்கிங். செய்வதற்கு ஆண்/பெண் ஊழியர்கள் தேவை.

தேநீர். மதிய உணவுடன் நாள் சம்பளம் 1500 /=

பகல். இரவு வேலையும் உண்டு.

மாலை 5 PM - 1 AM வரை இரவு வேலை.

சம்பளம் 1500 /= (பகல் + இரவு 3000 சம்பளம்)

தொடர்பு : 0777608528, 0753953437

## வேலையாட்கள் தேவை

காங்கேசன்துறையில் அமைந்துள்ள மருதம் பண்ணை (Farm) இற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு:

0777 474 498

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* நிலப்பரப்பு
* 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* A-9 வீதியிலிருந்து 250 மீற்றர் தூரம்
* களஞ்சியம் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் ஏற்ற இடம்
* தரகர் தேவையில்லை.
* பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 0760 389

(CS 26669) A-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 18 . 10 . 1930



விண்ணில் 17 . 10 . 2023

### திருமதி இமெல்டா கிறிஸ்ரோபர் (இராசம்மா)

**முருங்கன்**

யாழ். சில்லாலையைப் பிறப்பிடமாகவும், முருங்கனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இமெல்டா கிறிஸ்ரோபர் (இராசம்மா) அவர்கள் 17.10.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் சூசானம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மிக்கேல்பிள்ளை பிலிப்பாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மிக்கேல்பிள்ளை கிறிஸ்ரோபரின் (இராசையா) அன்பு மனைவியும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை மரியம்மாவின் (செல்லம்மா) பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஜறின் மேரி கிறிஸ்ரா (ராஜேஸ் - பிரான்ஸ்), எமிலி கிறேஸ் எவரெஸ்ரா (புவனேஸ்) மற்றும் பெனிக்னா டெய்சி பெலிசிற்றா (யோகா - அவுஸ்திரேலியா - இளைப்பாறிய சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர்), கொண்சி டொறின் கொன்செப்ரா (ஞானேஸ் - இளைப்பாறிய கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்), இயூஜின் மேபிள் இமாக்குளேற்றா (ரட்ணா - இத்தாலி - முன்னாள் ஆசிரியர், முருங்கன் மகா வித்தியாலயம்), பயஸ் ஜோசப் பன்ரலியன் (ஜெயசீலன் - பிரான்ஸ்), பிறிஜற் ஜெனோ வினிவிறிற்றா (பபா-தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), யூட் பற்றிக் றாம்சே (துனா - அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான யேசுதாசன் (கூட்டுறவு பரிசோதகர்), பீதாம்பரம் (இளைப்பாறிய விவசாய உதவிப் பணிப்பாளர்), அமலதாஸ் மற்றும் யோசவ் அலெக்சாண்டர் (இளைப்பாறிய சிவில் பொறியியலாளர்), ரூபி, றமேஷ்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ். மருத்துவபீடம்), மேரி பெலின்டா ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.யூட் சுஜீவன் (கொழும்பு லேடி றிச்வே வைத்தியசாலை), யோசவ் பிரஜீவ் (பிரான்ஸ்), றொமேஜன் மற்றும் றினோஜன் (இத்தாலி), செலின், வின்ஸ்ரன், ஜூலியா மற்றும் கரோலின் (பிரான்ஸ்), சாறுக்கா, அல்றிக்கா, அல்றீசன், அன்றொயின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், எமிலியின் பூட்டியும், அன்ரன் தேவதாசனின் வளர்ப்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ். வைற் ஹவுஸ் மலர்ச்சாலையில் 18.10.2023 (காலை 7-பி.ப 7) முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. 22.10.2023 முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் பூதவுடல் அவரது முருங்கன் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு 23.10.2023 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின் முருங்கன்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26676) A-1



## வாசிப்பை ஊக்கப்படுத்தல் விழிப்புணர்வு செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 21

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொதுநூலகமும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையும் இணைந்து 'வாசிப்பை குழந்தைகளிலிருந்து ஆரம்பித்தல்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த புதன்கிழமை கொக்குவில் பிரதேச மருத்துவமனை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவம் தொடர்பாக கொக்குவில் பொதுநூலகர் திருமதி நிசாந்தினி சிவசுதன் விழிப்புணர்வுக் கருத்துரையாற்றினார். (ச-66)

## மண் விற்பனைக்கு

வவுனியா, மன்னாரிற்கு குறைந்த விலையில் தரமான தோட்ட மண் மக்கி, கிரவல்

077 590 8995
077 178 9751

## வேலையாட்கள் தேவை

கட்டட நிறுவனம் ஒன்றிற்கு தங்கிநின்று வேலை செய்யக்கூடிய மேசன் வேலையாட்கள் தேவை. ஊரெழு,உரும்பிராய், கொக்குவில் ஆகிய பகுதிகளில்.

077 349 6918

## அகரம்

உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை

மலாலகம் | கொக்குவில்

### புதிய கல்வி ஆண்டு -2024

**புதிய தரம் 06**

தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

2024 தரம் 06 இற்கான நாள் வகுப்புக்கள் விஜயதசமி நன்னாள் அன்று ஆரம்பிக்கப்படும்.

24.10.2023 காலை 10.30 - 12.00 வரை

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

## அமெரிக்க லொத்தர் இலவச விசா

V2 Travels

0768226244
0768226241

## அமெரிக்க லொத்தர் விசா

2025ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன

* 5000இற்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்படுவர்
* அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S. Road, Jaffna. T.P: 0777 55 45 28

## Canada and Italy Visa

Canada மற்றும் Italy போன்ற நாடுகளுக்கான Short Term மற்றும் Long Term விசாக்கள் பெற்றுத் தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Visa Consultant
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584

## விவசாயிகளுக்கு

இந்தோனேசியாவிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளி கருவி 17 லீற்றர் (Sprayer) சில்வர், பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவியினை உத்தரவாதத்துடனும் விசேட விலைக்கழிவுடனும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

ஆர்க் என்ரபிறைசஸ்

102, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள் A9, வீதி. 070 191 3571

Hotline: 071 535 7799 / 071 973 9917

(cs 52549) (N.I.)

## பணியாளர் தேவை

**Computer Operator / Admin Assistant**
**(Full time / Part time Position )**

சுயவிபரத்தோடு (cv) நேரில் தொடர்புகொள்ளவும் அல்லது சுயவிபரத்தை (cv) rajaplaza@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இல. 74, ராஜா பிளாசா, பலாலி வீதி, கோண்டாவில்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

நெல்லியடி மத்திய கல்லூரியில் பழைய மாணவர்கள் ஒன்று கூடல் நிகழ்வும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

நெல்லியடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்க தாய்ச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் வே.கமலநாதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹரி இஞ்சினியர்ஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் சோ. யாதவன், சிறப்பு விருந்தினராக நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் கி.கிருஷ்ண குமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.